# <u>சேலம் மாநகராட்சி</u>

**2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

<u>பொருள்கள்</u>

**1)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**20452/2020**/LA3, நாள்.**17.11.2020** மற்றும் ந.க.எண்.**12609/2020**/LA3, நாள்.**21.11.2020**ம் தேதிய சுற்றறிக்கையின்படி, **2020–2021**ம் ஆண்டு **15**–வது மத்திய நிதிக் குழு பரிந்துரையின் பேரில் C.F.C. (Central Finance Commission) Tide Grant & Un Tide Grant சுகாதாரம், கழிப்பிடங்கள், குடிநீர் வசதி, திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டம் குறித்த பணிகள் மேற்கொள்ள ஏதுவாக சேலம் மாநகராட்சிக்கு மத்திய அரசு மான்யமாக Tide Grant Rs.14.66 கோடி & Un Tide Grant Rs.14.66 கோடி சேர்த்து மொத்தம் ரூ.**29.32** கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி பகுதியில் திடக்கழிவுகளை பணிகளை மேற்கொள்ள புதிய Compactor வாகனங்கள் ( 16 M3 Capacity ), (Zone-I & Zone-II 2 Nos. & Zone-III & Zone-IV 2 Nos.) வாங்கும் பணி அவசியமாகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ள **30.06.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டது.

சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.**291**, நாள்.**28.07.2022**ம் தேதியின்படி M/s. Sharp Systems, கோயமுத்தூர் (L1) நிறுவனம், சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு தலா ஒரு வாகனம் வீதம் மொத்தம் இரண்டு வாகனங்களுக்கு இ**4/501**/வாகனம்/**2021–2022** மதிப்பீடு தொகை ரூ.**99.00** இலட்சத்திற்கு, ரூ.**98,96,030.00/-** மதிப்பீட்டை விட (**0.04**%) குறைவாக ஒப்பந்தபுள்ளி தொகை வழங்கியுள்ளார்கள். அதனை தொடர்ந்து தொழில் நுட்ப குறியீடுகளுக்கு ஏற்றவாறு அசோக் லேலேண்டு நிறுவனத்தின் Proforma Invoice Ros/RK/Project/1152, Dated.29.09.2022 (Ashok Leyland – PA 1920/47 Haulage Chassis with Cabin – BS-VI) மாடலின்படி தயாரிப்பு நிறுவனத்தினால்

தொடர்ச்சி..

அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு அரசு விலை விகிதம் ஒரு வாகனத்திற்கு (New Chassis) ரூ.23,23,000/ வீதம் மொத்தம் இரண்டு வாகனங்களுக்கு ரூ.46,46,000/–ஐ Ashok Leyland நிறுவனத்திற்கு தொகையை காசோலை / RTGS மூலம் வழங்க ஆணையாளர் அவர்களிடம் 03.10.2022ம் தேதி அனுமதி பெறப்பட்டது.

சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.291, நாள்.28.07.2022ம் தேதியின்படி M/s. Sharp Systems, கோயமுத்தூர் (L1) நிறுவனம், அம்மாபேட்டை மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு தலா ஒரு வாகனம் வீதம் மொத்தம் இரண்டு வாகனங்களுக்கு இ4/502/வாகனம்/2021–2022 மதிப்பீடு தொகை ரூ.99.00 இலட்சத்திற்கு, ரூ.98,96,030.00/- மதிப்பீட்டை விட (0.04%) குறைவாக ஒப்பந்தபுள்ளி தொகை வழங்கியுள்ளார்கள். அதனை தொடர்ந்து தொழில் நுட்ப குறியீடுகளுக்கு ஏற்றவாறு அசோக் லேலேண்டு நிறுவனத்தின் Proforma Invoice Ros/RK/Project/1152, Dated.29.09.2022 (Ashok Leyland – PA 1920/47 Haulage Chassis with Cabin – BS-VI) மாடலின்படி தயாரிப்பு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு அரசு விலை விகிதம் ஒரு வாகனத்திற்கு (New Chassis) ரூ.23,23,000/ வீதம் மொத்தம் இரண்டு வாகனங்களுக்கு ரூ.46,46,000/–ஐ Ashok Leyland நிறுவனத்திற்கு தொகையை காசோலை / RTGS மூலம் வழங்க ஆணையாளர் அவர்களிடம் 03.10.2022ம் தேதி அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட Ashok Leyland நிறுவனத்திற்கு மொத்தம் 4 வாகனத்திற்கு ரூ.92,92,000/–ஐ காசோலை / RTGS மூலம் வழங்க வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்றும் தொகை வழங்கியதையும், எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் பின்னேற்பு வழங்கி மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு:–

மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

(இ4/11873/2020)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அங்கீரிக்கப்பட்டது.

2) சேலம் மாநகராட்சி 2021–22ம் ஆண்டு நமக்கு நாமே திட்ட நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.2ல் ஜாகீர் அம்மாபாளையம் ராசிநகர் 6வது குறுக்குத் தெருவில் சாக்கடை கால்வாயை சீரமைத்து சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.13.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 01.06.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.10 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு 15.06.2022 அன்று வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

மேற்படி கோட்டம் எண்.2ல் ஜாகீர் அம்மாபாளையம் ராசிநகர் 6வது குறுக்குத் தெருவில் சாக்கடை கால்வாயை சீரமைத்து சிறுபாலம் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது பணிகளின் தன்மை மற்றும் இடத்தின் தன்மைக்கேற்ப மூல மதிப்பீட்டில் உள்ள ஒரு சில இனங்களின் அளவுகள் குறைத்தும், ஒரு சில இனங்களின் அளவுகள் கூடுதலாகவும் சேர்த்தும் இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்சொன்னவாறு மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் அளவு பணிகளும், அதற்கான கூடுதல் செலவு தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனம் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Plastering with Cement Mortat mix 1:3 to 20mm thick | 158.05 m2 | 75046.88 | 182.40 m2 | 86457.60 | 11410.72 |
| 2 | Centering for Sides and Soffitts Above 1.00m height | 52.20 m2 | 40162.16 | 429.21 m2 | 330062.49 | 289900.33 |
| 3 | Centering for Sides and Soffitts slab & Beam | 13.32 m2 | 11505.82 | 33.91 m2 | 29264.33 | 17758.51 |
| 4 | Providing and Laying of Concrete mix M20 Grade | 4.55 m3 | 33072.99 | 9.73 m3 | 70659.26 | 37586.27 |
| 5 | Supply, fabrication and fixing of TMT Steel Rods | 455.00 Kg | 36272.60 | 645.50 Kg | 51640.00 | 15367.40 |
| | **மொத்தம்** | | **196060.45** | | **568083.68** | **372023.23** |

மேற்படி பணியில் BOQ வில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகளும் SOR ல் உள்ள மதிப்பீட்டில் இல்லாத இனங்களும் பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடனடியாக முடிக்க வேண்டி இருந்ததால் இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம் அவர்கள் மூலம் 2021–22– ஆம் ஆண்டு செந்தார விலைவிகிதப்பட்டியல்படி

தொடர்ச்சி..

மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் (SOR items) 2021–2022–ஆம் ஆண்டு அதே விலை விகிதத்தில் செய்து முடித்ததற்கு பின்னேற்பு அனுமதியும், அதற்காக ஆகும் கூடுதல் செலவுத் தொகை ரூ.3,72,023.23/–க்கு மன்ற அனுமதியும், மேற்படி செலவினத் தொகையை அசல் மதிப்பீடு ரூ.13.50/–இலட்சத்திற்குள் வருவதால் அனைத்து பணியிற்கான செலவினத் தொகையினையும் அசல் மதிப்பீடு தொகைக்குள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம் அவர்களால் செய்து முடித்ததிற்கு அனுமதியும், இப்பணிக்காக பெறப்பட்ட விலைப்பட்டியல் தொகையினை ஏற்க்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் செலவினங்களையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(E3/NNT/4174/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் விக்டோரியா வணிக வளாகம் அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணிக்கு ஸ்மார்ட் சிட்டி நிர்வாக குழு தனது கூட்ட எண் 07–06 /2017–2018 நாள் 13.03.2018ல் பெறப்பட்டு உயர்மட்ட குழுவின் அனுமதி 13.06.2018ல் பெற்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமைப்பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.25477/2017/டிஓ1 நாள் 13.07.2018ல் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி 02.11.2018ல் கோரியதில் குறைந்த ஒப்பந்தபுள்ளிதாரர் திருவாளர் அன்னன் மார் கன்ஸ்டிரக்சன் சேலம் நிறுவனத்தின் விலைகுறைப்புக்கு பிந்தைய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 6,59,32,234/–ஐ மன்ற தீர்மான எண்339 நாள் 19.12.2018ன்படி பணிஉத்திரவு 04.01.2019ம் தேதியில் வழங்கப்பட்டு பணிகள் துவங்கி முடிக்கப்பட்டுள்ளது.

சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள நவீன அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்திற்கு மின் வாரியத்திடம் இருந்து மின் இணைப்பு பெற்றிட தேவையான இனங்கள் அசல் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை, இதனால் பணிகள் முடிக்கப்பட்டும் மின்இணைப்பு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவந்திடவும், மதிப்பீட்டில் Lump Sum Amount மற்றும் பணிக்கு தற்போது தேவை இல்லாத சில இனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை மற்றும் சில இனங்களின் அளவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு சேமிப்பு தொகையில் இருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளவும், இப்பணிக்காக தமிழ்நாடு மின்வாரிய செந்தாரவீத பட்டியலில் அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகிதத்திலும் பட்டியலில் இல்லாத இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அதற்கான டேட்டா கீழ் கண்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

| Sl. No | Qty | Description of Work | Rate | Per | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 1 Number | Supply and fixing of 200A aerial fuse unit as HRC fuse din type with fuse base on hylum sheet with suitable size MS box arrangements with necessary clamp set on EB pole and incoming and outgoing arrangements. **(DATA-A)** | 13800.00 | Each | 13800.00 |
| 2 | 1 Number | Supply, fabrication and erection of 50mm x 50mm 'L' angle suitable for clamping of 3½x70 sq.mm. LTUG alu.cable on necessary manontry pedestal arrangements and S&F of 3" dia GI pipe for receiving EB supply on wall. **(DATA-B)** | 23000.00 | Each | 23000.00 |
| 3 | 1 Number | Supply and Erection of 3'x2'x1' size dust and vermin proof cubical ariel box made up of 16 SWG (TATA) CRCA sheet steel on wall by necessary angle iron frame on postwith necessary clamps compressing of 3 Nos 125 Amps HRC Fuse units base with seporate compartment for EB metre on suitable hylam sheet covered by proper top cover inclusive of cable incoming and outgoing arrangements with necessary connections complete. **(DATA-C)** | 17927.00 | Each | 17927.00 |
| 4 | 1 Number | Supply and Erection of 2'x2'x1' size dust and vermin proof cubical ariel box made up of 16 SWG (TATA) CRCA sheet steel on wall by necessary angle iron frame on postwith necessary clamps compressing of 1 No 200 Amps cubical type front oberated double break switch with suitable hylam sheet covered by proper top cover inclusive of cable incoming and outgoing arrangements with necessary connections complete. **(DATA-D)** | 29800.00 | Each | 29800.00 |
| 5 | 1 Number | Supply and Erection of 2'x2'x1' size dust and vermin proof cubical ariel box made up of 16 SWG (TATA) CRCA sheet steel on wall by necessary angle iron frame on postwith necessary clamps compressing of 1 No 200 Amps 4pole change over switch with suitable hylam sheet covered by proper top cover inclusive of cable incoming and outgoing arrangements with necessary connections complete. **(DATA-E)** | 24000.00 | Each | 24000.00 |
| 6 | 1 Number | Supply and erection of 200A capacity dust and vermin proof cubical panel board of 16 SWG (TATA) CRCA sheet steel with supply and fixing of following interior mounting fuse switches with HRC fuse arrangement in Horizontal rows with one switch over the other, with a central bus bar chamber and one no. of horizontal cable chamber at the top side and another one no. of vertical cable chamber at the right side next to the fuse switch chamber and confirming to I.E. Rules. | 125000.00 | Each | 125000.00 |

தொடர்ச்சி..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1. 200A TPN switch disconnector fuse units interior only with HRC fuses double break - 1 No (Incoming)<br>2. 125A TPN switch disconnector fuse units interior only with HRC fuses double break - 1 No (Outgoing) | | | |
| | | 3. 63A TPN switch disconnector fuse units interior only with HRC fuses double break - 5 Nos (Outgoing)<br>The bus bar chamber will consist of 4Nos 1½" x 1/4" copper flat for phases, neutral and interconnection for incoming switch. The buses mounted on ' SMC ' bus insulator at proper and sufficient spacing between the buses as per IE rules. This bus bar should be segregated from the adjacent chamber by providing hylem sheet of 3mm thick as particians 2Nos 1" x 1/8" copper flat should be provided all round the panel rear side for earth bus.<br>The outgoing 125A TPN switch should be connected with phase and neutral bus with 1" x 1/8" copper flat and 63A TPN switche should be connected with No.6 SWG copper in between 3phase and neutral. Each switch should be connected with earth bus with 2runs of 1" x 1/8" copper flat, it should be provided with heat shrinkable sleeves using RYB and block colours.<br>The panel should have a separate mounting chamber at the top side consisting of suitable metering arrangements along with Led Indicator lamps should be provided with control toggle switches and bakelite fuse unit. The panel should be painted with powder coated of approval colour, approved by the officer and also metallic danger boards.<br>The capacity of fuse switches size of the incoming and outgoing cable the place to which the supply is feed shall be marked on switch chamber.<br>The panel board should mount on 4" x 1½" x 1/4" MS base channel provided all around the bottom of the panel. The whole arrangements should be erected on a masonry pedestal to be constructed with suitable foundation bolt and nuts, ' such as that the lowest switch handled is a height of 0.75m from the Ground Level. [ All switches are L&T / English Electric / Siemens make] **(DATA -F)** | | | |
| 7 | 1<br><br>Number | Supply and erection of 125A capacity dust and vermin proof cubical panel board of 16 SWG (TATA) CRCA sheet steel with supply and fixing of following interior mounting fuse switches with HRC fuse arrangement in Horizontal rows with one switch over the other, with a central bus bar chamber and one no. of horizontal cable chamber at the top side and another one no. of vertical cable chamber at the right side next to the fuse switch chamber and confirming to I.E. Rules. | 106000.0<br>0 | Each | 106000.00 |

தொடர்ச்சி..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1. 125A TPN switch disconnector fuse units interior only with HRC fuses double break - 1 No (Incoming)<br>2. 32A TPN switch disconnector fuse units interior only with HRC fuses double break - 6 Nos (Outgoing)<br>The bus bar chamber will consist of 4Nos 1¼" x 1/4" copper flat for phases, neutral and interconnection for incoming switch. The buses mounted on ' SMC ' bus insulator at proper and sufficient spacing between the buses as per IE rules. This bus bar should be segregated from the adjacent chamber by providing hylem sheet of 3mm thick as particians 2Nos 1" x 1/8" copper flat should be provided all round the panel rear side for earth bus. | | | |
| | | The outgoing 125A TPN switch should be connected with phase and neutral bus with 1" x 1/8" copper flat and 63A TPN switche should be connected with No.6 SWG copper in between 3phase and neutral. Each switch should be connected with earth bus with 2runs of 1" x 1/8" copper flat, it should be provided with heat shrinkable sleeves using RYB and block colours.<br>The panel should have a separate mounting chamber at the top side consisting of suitable Digital multi processing metering arrangements along with CTS, L&T make Led Indicator lamps should be provided with control toggle switches and bakelite fuse unit. The panel should be painted with powder coated of approval colour, approved by the officer and also metallic danger boards.<br>The capacity of fuse switches size of the incoming and outgoing cable the place to which the supply is feed shall be marked on switch chamber.<br>The panel board should mount on 4" x 1½" x 1/4" MS base channel provided all around the bottom of the panel. The whole arrangements should be erected on a masonry pedestal to be constructed with suitable foundation bolt and nuts, ' such as that the lowest switch handled is a height of 0.75m from the Ground Level. [ All switches are L&T / English Electric / Siemens make] **(DATA - G)** | | | |
| 8 | 5 Number | Supply and Erection of cubical type panel Board (16 SWG 3.25ft x 3f x 1 ft size panel board) IP 43, as per IS 8623 III; Impact resistance IK09; Frame MCCB Incomer & Single Phase / Three Phase MCBs as outgoing (8way, MCCB + 48 Modules) with 32A 4 pole MCB as incoming and 3 Nos 25A 30mA DP ELCB, 12Nos 32A SP MCB as outgoing with suitable trunking box MS cable entry boxes and internal connections on suitable angle Iron frame work with earth connection only. The MCB DB, MCCB MCB's and Change over switch should be with ISI mark. (Like Hager / Legrand make / equivalent) (For Rooms) (DATA-H) | 29000.00 | Each | 145000.00 |

தொடர்ச்சி..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 50 Metres | Supply and clamping of 3½x70 sq.mm. PVC LTUG armoured cable on post or on wall with MS clamps. (SD-225) | 595.00 | Mtr | 29750.00 |
| 10 | 6 Numbers | Supply and fixing of brass cable gland for 3½x70 sq.mm. PVC LTUG aluminium armoured cable with earth connection. (SD-189) | 509.00 | Each | 3054.00 |
| 11 | 12 Numbers | Supply and providing cable end termination of 3½x70 sq.mm. PVC LTUG aluminium armoured cable with necessary aluminium cable sockets by crimping etc with electrical connection complete. (SD-238) | 307.00 | Each | 3684.00 |
| 12 | 16 Numbers | Supply and clamping of 4 x 16 sq.mm. PVC LTUG armoured cable on post or on wall with MS clamps. (SD-221) | 324.00 | Each | 5184.00 |
| 13 | 10 Numbers | Supply and fixing of brass cable gland for 4 x 16 sq.mm. PVC LTUG aluminium armoured cable with earth connection. (SD-185) | 268.00 | Each | 2680.00 |
| 14 | 4 Numbers | Earthing as per the ISI specification with an earth electrode of 2.10 metre Class 'B' GI pipe of dia not less than 40mm with copper earth plate of size 125mm x 50mm x6mm with necessary funneling arrangements with necessary masonry work and with 38mm RCC cover slab for the brick masonry. (SD-233) | 2516.00 | Each | 10064.00 |
| | | TOTAL | | Rs. | **538943.00** |

மேற்கண்டுள்ளவாறு வரிசை எண் 1 முதல் 14 வரையுள்ள அசல் மதிப்பீட்டில் சேர்க்கப்படாத புதிய இனங்களுக்கு தமிழ்நாடு மின்வாரிய செந்தாரவீதபட்டியல் விலை வீதத்திலும் பட்டியலில் இல்லாத இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று டேட்டா தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமானது ஏற்கெனவே இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற்றுள்ள மொத்த தொகை ரூ 7.85 கோடிக்குள் அடங்கும் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கில் பணியினை நிறைவேற்றிமுடித்திட கூடுதல் இனங்களை உட்புகுத்தி பணியினை செய்து முடிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும், அசல் மதிப்பீட்டில் இல்லாத கூடுதல் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகம் சென்னைக்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:–**

1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் இல்லாத பணிக்கு அவசியமான கூடுதல் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற்றிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளை அனுமதிக்கலாம்.
3) கூடுதல் செலவின தொகையினை மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள மொத்த தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ள தொகைக்குள் (ரூ,7.85 கோடி) வருவதால் அனுமதிக்கலாம்.

**(SSCL/4975/2018)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3 அனுமதிக்ககப்பட்டது.

**4)** சேலம் மாவட்டத்தில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி **07.10.2022** முதல் **21.10.2022** வரை **15** நாட்கள் தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கத்தில் நடத்திக் கொள்ள அனுமதி கேட்கப்பட்டுள்ளது. தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கத்தில் கைத்தறி கண்காட்சி **07.10.2022** முதல் **21.10.2022** வரை **15** நாட்கள் நடத்த ஒதுக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்ற தீர்மானத்தில் திருமணம் அல்லாத இதர நிகழ்ச்சிகள் நடத்திக்கொள்ள **12** மணி நேரத்திற்கு ரூ.**2.00** இலட்சம், எனவும் குப்பை அகற்றுதல் அரங்கம் சுத்தம் செய்வதற்கான கட்டணம் ரூ.**30,000/–** மற்றும் GST, மின்சார பயனீட்டு கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூ.**13/–** என நிர்ணயம் செய்யப்பட்டது. தொங்கும் பூங்கா அரங்கத்தை பயன்படுத்திக்கொள்ள நிர்ணயம் செய்துள்ள தொகையினை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான கைத்தறி கண்காட்சியில் **60** கடைகள் (Stall) அமைத்தல், நோட்டீஸ் அடித்தல், மின்சாரக்கட்டணம், அலங்காரப்பணி, துவக்கவிழா செலவினங்கள், ஆட்டோ விளம்பரம், தட்டி விளம்பரம், Flex Banner, ஜவுளிகளுக்கு காப்பீடு செய்தல் மற்றும் இதர பணிகள் அனைத்திற்கும் ரூ.**19,17,860/–** மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளது என்றும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் ஜவுளிகளை விற்பனை செய்யும்பட்சத்தில், நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை கருத்தில் கொண்டும், நலிந்த கைத்தறி தொழிலினை மேம்படுத்தும் பொருட்டும் மேற்படி கண்காட்சி மாநில அரசும் மற்றும் ஒன்றிய அரசும் இணைந்து கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளதால், மேற்படி சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கத்திற்கு கடந்த ஆண்டு கைத்தறி கண்காட்சி நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டவாறு, இந்த ஆண்டும் வாடகையின்றி பராமரிப்பு தொகை மற்றும் மின்சார பயனீட்டு கட்டணத்திற்கு மட்டும் தொகை செலுத்தும் வகையில் கைத்தறி கண்காட்சி நடத்திட அனுமதி வழங்குமாறு உதவி அமலாக்க அலுவலர் / துணை இயக்குநர் (கூ.பொ), கைத்தறி துறை, சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, **07.10.2022** முதல் **21.10.2022** வரை **15** நாட்களுக்கு வாடகையின்றி பராமரிப்பு தொகை மற்றும் மின்சார கட்டணம் பயன்பாட்டிற்கு ஏற்ப தொகை செலுத்த வேண்டும் என்றும் கைத்தறி கண்காட்சி நடத்த தொங்கும் பூங்காவை பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கையினையும் அனுமதிக்கலாம்.

**(ஜே4/4901/2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்ககப்பட்டது.

**5)** சேலம் மாநகராட்சி நமக்கு நாமே திட்டம் நகர்ப்புறம் (2021–2022) அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் எண்.5–ல் உள்ள அழகாபுரம் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கும் பணி ( Construction of Toilet Block and Water Supply Arrangements to the Corporation Elementary School and High School at Alagapurampudhur in division No-5 of Hasthampatty Ward office ) பணியினை நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்) 2021 – 2022 கீழ் மேற்கொள்ள, (அரசாணை G.O.(MS)No.71 Date : 13.09.2021)-ன்படி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

அதன்படி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் எண்.5–ல் உள்ள அழகாபுரம் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கும் பணி ( Construction of Toilet Block and Water Supply Arrangements to the Corporation Elementary School and High School at Alagapurampudhur in division No-5 of Hasthampatty Ward office ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்தில் 33 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை எச்டிஎப்சி பேங்க் லிமிடெட் DD No.039044, Rs.5,00,000/- Date 29.09.2022 என்ற பெயரில் பொது மேலாளர், ஏ.கே.ஆர்.எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட், சித்தர்கோவில் மெயின்ரோடு, சேலம். அவர்கள் சேலம் மாநகராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதின் பேரில் மீதமுள்ள 67 சதவிகிதம் ரூ.10,00,000/– தொகையினை மாநில அரசின் நிதி பங்களிப்புடன் மேற்படி திட்டத்தை செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணி நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியினை 33 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை எச்டிஎப்சி பேங்க் லிமிடெட் DD No.039044, Rs.5,00,000/- Date 29.09.2022 என்ற பெயரில் பொது மேலாளர், ஏ.கே.ஆர்.எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட், சித்தர்கோவில் மெயின்ரோடு, சேலம் அவர்கள் சேலம் மாநகராட்சியில் ஒப்படைக்கபட்டதின் பேரில். மீதமுள்ள 67 சதவிகிதம் ரூ.10,00,000/– தொகையினை மாநில அரசின் நிதி பங்களிப்புடன் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெறவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணிநிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(E3/NNT/17472/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3 அனுமதிக்ககப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் (சுமார் 4 ஏக்கர்) தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி **05.12.2022** முதல் **29.01.2023** ஆம் தேதிவரை **56** நாட்களுக்கு நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்தினர் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள (சுமார் 4 ஏக்கர்) காலியிடத்தில் தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி **05.12.2022** முதல் **29.01.2023** ஆம் தேதி வரை பொருட்காட்சி மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைத்து நடத்திட **56** நாட்களுக்கு முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/–ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.11,00,000/–ம் என தனியார் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடியும் வரை நிர்ணயம் செய்து, திருவாளர்கள்.மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அனுமதிக்கலாம்.

**(கே1/3600/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் (சுமார் 4 ஏக்கர்) தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி 05.**04.2023** முதல் **04.06.2023**ஆம் தேதிவரை **61** நாட்களுக்கு நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்தினர் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள (சுமார் 4 ஏக்கர்) காலியிடத்தில் தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி 05.**04.2023** முதல் **04.06.2023**ஆம் தேதிவரை பொருட்காட்சி மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைத்து நடத்திட **61** நாட்களுக்கு முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/–ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.12,00,000/–ம் என தனியார் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடியும் வரை நிர்ணயம் செய்து, திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அனுமதிக்கலாம்.

**(கே1/3599/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

8) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

ஜாகீர் அம்மாபாளையம் 2வது கோட்டம் ஜீவா சிலை பின்புறம் சாலையில் சாக்கடை கால்வாய் அமைத்து மண்சாலையை கான்கிரீட் சாலையாக அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

9) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 2வது கோட்டம் சாஸ்திரி நகர் 1, 2 மற்றும் 3வது குறுக்கு தெருக்களுக்கு சாக்கடை கால்வாய் அமைத்து கான்கிரீட் சாலை அமைத்தல், சாஸ்திரி நகரில் மெயின் ரோட்டிலிருந்து முரளி மேஸ்திரி சந்தில் சாக்கடை கால்வாய் அமைத்து கான்கிரீட் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

10) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 2வது கோட்டம் காமராஜ் காலனி பகுதியில் 1 முதல் 5 தெருக்களிலும் சாக்கடை கழிவுநீர் செல்ல சாக்கடை கால்வாய் அமைத்து 5 தெருக்களுக்கும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

11) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 2வது கோட்டம் ஔவைநகர் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மழைநீர் வடிகால் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 2வது கோட்டம் தெய்வாணை நகரில் அனைத்து தெருக்களுக்கும் சாக்கடை கால்வாய் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) <u>2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 2வது கோட்டம் ஜாகீர் அம்மாபாளையம் பகுதியில் ஜீவாசிலை அருகில் இருந்து பாரதிநகர் வழியாக சோனா கல்லூரி வரை சாக்கடை கால்வாய் பழுதடைந்து உள்ளது. இங்கு புதிதாக சாக்கடை கால்வாய் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

14) <u>4வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி சே.மகேஸ்வரி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.4ல் உள்ள அழகாபுரம் பகுதியில் உள்ள லட்சுமணன் நகர், சென்றாய கவுண்டர் வட்டம், எக்ஸ். எம்.பி., தங்கபாலு அவர்களது வீடு அருகில், பாறைவட்டம், திருமூலர் தெரு, அழகு விநாயகர் தெரு, அன்னை தெரசா நகர் ஆகிய தெருக்களில் மழை காலங்களில் கழிவுநீர் செல்லும் சாக்கடை கால்வாய் மிகவும் பாதிப்படைந்தும் சில தெருக்களில் சாக்கடை இல்லாத காரணத்தினால் குடியிருப்பு வீடுகிறல் மழைநீர் புகுந்து தேங்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் மக்கள் வெளியே சென்று வர மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே, மேற்கண்ட தெருக்களில் கல்வெட்டு அமைத்து, சாக்கடை வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

15) <u>22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்</u>

கோட்டம் 22 சேலத்தாம்பட்டி ஏரி உபரிநீர் வெளியேறி சிவதாபுரம், மெய்யன் தெரு, குடுமியான் தெரு, இந்திராநகர், அம்மனிநகர் மெயின் ரோடு பகுதிகளில் தண்ணீர் தேங்கி மிகவும் பாதிப்பான நிலையில் உள்ளது. எனவே, கிருஷ்ணப்பா தியேட்டர் முதல் முத்து மண்டபம் வரை வாய்க்கால் 10 அடி ஆழம் 5 அடி அகலம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

16) <u>33வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி பு.சீ. ஜெயஸ்ரீ அவர்களின் தீர்மானம்</u>

1. கனகராஜ கணபதி தெரு வடிகால் மற்றும் தார்சாலை
2. கிருஷ்ணன் கோயில் தெரு தார்சாலை.
3. தம்பி காளியம்மன் கோயில் தெரு 2 மற்றும் 3 வடிகால், தார்சாலை.
4. புட்டா நாகைய்யர் தெரு, மழைநீர் வடிகால்.
5. நெ.1 பிள்ளையார் கோவில் தெரு மழைநீர் வடிகால்.
6. நெ.1 புதுத்தெரு வடிகால் மற்றும் தார்சாலை
7. சேர்மன் சடகோபர் தெரு. மழைநீர் வடிகால்.
8. முராரி வரதய்யர் தெரு. மழைநீர் வடிகால்.
9. பரமகுடி நன்னுசாமி தெரு. மழைநீர் வடிகால்.
10. பென்னாடம் வெங்கட்ராமன் தெரு. மழைநீர் வடிகல்.
11. நடேசன் தெரு. வடிகால் மற்றும் தார்சாலை.
12. பங்களா தெரு. தார்சாலை.
13. நெ.3 புதுத்தெரு. தார்சலை.
14. 3வது அக்ரஹாரம், மழைநீர் வடிகால்.
15. குலசேகர ஆழ்வார் தெரு மற்றும் நெ.3 புதுத்தெரு இணைக்கும் சந்தில் உள்ள சாக்கடை சந்து சீர் செய்தல்.
16. பங்களா தெருவில் உள்ள சாக்கடை சந்து சீர் செய்தல்.

மேற்கண்ட 33வது கோட்டத்தில் உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை வசதி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

17) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள காமராஜ்நகர் நெசவாளர் காலனியில் உள்ள போர்வெல் பைப்பு தண்ணீர் பைப்பு கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக போடப்பட்ட 2'' பி.வி.சி பைப் தற்போது அந்த அனைத்தும் உப்பு படிந்து அடைப்பு ஏற்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்களின் தினசரி தேவையை பூர்த்தி செய்ய அனைத்து 2'' பி.வி.சி. பைப் மாற்றம் செய்து புதியதாக 3'' பி.வி.சி. பைப் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

18) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள மண்சாலையை பொதுமக்களின் கோரிக்கையின்படி பேவர் பிளாக் அமைத்தல்.

1. நாகர் படையாச்சி காடு.
2. சாஸ்திரி நகர்.
3. இ.பி. ஆபிஸ் பின்புறம்.
4. மாரியப்பன் நகர் கிழக்குபுறம் சாலை.
5. இராமநாதபுரம் கிழக்கு மற்றும் மேற்கு, தெற்குபுறம் சாலை.
6. இரஷ்யா பகுதி.
7. குமரகிரிப்பேட்டை பைபாஸ் வடக்குபுறம் உள்ள சாலை.
8. குட்டிக்கரடு செல்லும் பெரியார் சாலை.
9. செல்வநகர் கிழக்கு மற்றும் வடக்குபுறம் உள்ள சிறிய சாலை.

மேற்கண்ட இடங்களில் சாலைகள் மிகவும் குறுகிய சாலையாக சுமார் 10 அடி முதல் 12 அடி வரை சாலைகள் மண்சாலையாக உள்ளதால், பொதுமக்களின் கோரிக்கையின்படி, மேற்கண்ட இடங்களில் பேவர் பிளாக் (அல்லது) கான்கிரீட் சாலை அமைக்கவும், இந்த பணியை மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பணிகள் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

19) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

1. காமராஜ் நகர் காலனி மாரியம்மன் கோயில் தெரு.
2. செல்வநகர் பிரதான மெயின் ரோடு.
3. காந்திஜீ காலனியில் சாலைகள்.
4. இராமநாதபுரம் உள்ள தெற்குபுறம் உள்ள தார்சாலை.

மேற்படி 37வது கோட்டம் பகுதியில் உள்ள மேற்கண்ட இடங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்து உள்ள தார்சாலையை புதியதாக தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

20) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

1. மாரியப்பன் நகர் கிழக்குபுறம் உள்ள அனைத்து சாலைகள்.
2. செல்வநகர் செல்லும் பிரதான சாலை மற்றும் கிழக்குபுறம் உள்ள மண்சாலை.
3. இ.பி.ஆபீஸ் பின்புறம் உள்ள இரண்டு சாலைகள் சாக்கடை மற்றும் சாலை அமைத்தல்.
4. சாஸ்திரிநகர் பகுதியில் உள்ள இரண்டு சாலைகள் மண்சாலை மற்றும் சாக்கடை அமைத்தல்.
5. குமரகிரிப்பேட்டை, புதுப்பேட்டை, குட்டிக்கரடு ஆகிய பகுதிகளில் உள்ள மண்சாலையை தார்சாலை அமைத்தல்.
6. ரஷ்யாபகுதி மெயின் ரோடு உள்ள வடக்குபுறம் மண்சாலை தார்சாலை அமைத்தல்.

மேற்படி 37வது கோட்டம் பகுதியில் உள்ள மேற்கண்ட இடங்களில் உள்ள மண்சாலையை தார்சாலை மற்றும் சாக்கடை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

21) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

1. பூங்காடு பகுதி முழுவதும்.
2. காந்திஜீ காலனி. 5 தெருக்கள் அனைத்தும்.
3. செல்வநகர் மெயின்.
4. மாரியப்பன் நகர் முழுவதும்.
5. காமராஜ் நகர் காலனி தெற்குபுறம் உள்ள பகுதி.
6. இராமநாதபுரம் தெற்குபுறம் உள்ள பகுதி.
7. குமரகிரிபேட்டை முழுவதும் கால்வாய் அமைத்தல்.
8. குட்டிக்கரடு, புதுப்பேட்டை செல்லும் பெரியார் நகர் பகுதி முழுவதும் சாக்கடை அமைத்தல்.
9. ரஷ்யாபகுதி செல்லும் பிரதான சாலை.
10. நாமமலை காலனி தெற்குபுறம் உள்ள கால்வாய் அமைத்தல்.

மேற்படி 37வது கோட்டம் பகுதியில் உள்ள மேற்கண்ட பகுதி முழுவதும் கால்வாய் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

22) <u>57வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. சீனிவாசன் அவர்களின் தீர்மானம்</u>

களரம்பட்டி 57வது கோட்டத்தில் கீழ்க்கண்ட தெருக்களில் தார்சாலை மற்றும் சாக்கடை அமைக்க வேண்டிய தெருக்கள்..

1. அண்ணா வாத்தியார் தெரு (பாஸ்கர் நகர்)
2. களரம்பட்டி மெயின் ரோடு (காளியம்மன் கோவிலில் இருந்து தேவி தியேட்டர் வரை)
3. களரம்பட்டி நேதாஜி தெரு (ஆட்டோ ஸ்டேண்ட்ல் இருந்து 56, 57 மாநகராட்சி வார்டு அலுவலகம் வரை)
4. களரம்பட்டி மாரியம்மன் தெரு எதிரில்.
5. செல்லக்குட்டிக்காடு செல்வம் நகர்.
6. செல்லக்குட்டிக்காடு போலீஸ்காரர் நகர்.
7. செல்லக்குட்டிக்காடு சீனி பிரஸ் 1, 2 தெருக்கள்.

ஆகிய தெருக்களில் சாலை வசதி, சாக்கடை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

23) <u>57வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. சீனிவாசன் அவர்களின் தீர்மானம்</u>

57வது கோட்டம் களரம்பட்டி காளியம்மன் கோவில் மைதானம் மேலும் கருங்கல்பட்டி அம்மா உணவகம், மாநகராட்சி மருத்துவமனை அருகில் காலி இடம் இருப்பதால், சமூக விரோதிகள் சில தவறான செயல்கள் நடப்பதால் இரண்டு இடத்திலும் உயர்மின்விளக்கு கோபுரம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

24) <u>57வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா. சீனிவாசன் அவர்களின் தீர்மானம்</u>

57வது கோட்டம் களரம்பட்டி மெயின் ரோட்டில் உள்ள மாநகராட்சி கழிவறையில் ஒரு பகுதி பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கடந்த மூன்று ஆண்டுகளாக உபயோகத்தில் இல்லாமல் மூடிவைத்து உள்ளது. ஆகவே, அதை இடித்து புதியதாக கட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

25) <u>59வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.பெ. முருகன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 59வது கோட்டத்திற்கு உட்பட்ட சிவசக்திநகர் 2, 4 தெருக்களில் சாக்கடை மற்றும் சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மழைகாலம் என்பதால் சாக்கடை நீர் சாலையில் ஓடுகிறது மற்றும் தேங்கி நிற்கின்றது. இதில் கொசுக்கள் அதிகம் இருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கு காய்ச்சல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இப்பகுதிக்கு சாக்கடை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

26) <u>59வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.பெ. முருகன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 59வது கோட்டத்திற்கு உட்பட்ட சின்னபச்சக்காடு, இந்திராநகர் பகுதியில் 5 மாதங்களுக்கு முன்பு வடிகால் அமைக்கப்பட்டது. இதுநாள் வரை தார்சாலை அமைக்கப்படவில்லை. குண்டும் குழியுமாக சாலை உள்ளது. மழைகாலம் என்பதால் வண்டி வாகனம் செல்லுவதற்கும், பொதுமக்கள் நடந்து செல்லுவதற்கும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்படி பகுதிக்கு தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**27)** சேலம் மாநகராட்சி நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) 2021–22ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.09–ல் வாய்க்கால் பட்டறை தெற்கு தெரு மற்றும் ஸ்ரீ வாரி கார்டன் பகுதியில் 90mm Dia குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு தொகை ரூ.1,30,000/– + ரூ.7,000/– மொத்தம் ரூ.1,37,000/–ன்படி ரூ.4,10,000/–ம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள (அரசாணை G.O.(MS)No.71, Date : 13.09.2021 ) – வழிகாட்டுதலின்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது.

எனவே மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.4.10 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித எண். ROC.No.28244-36/2021/P2, Date:25.08.2022–ன் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டத்தின் அடிப்படையில் E3/NNT/EST.No.33/WS/2021-2022, Date:20.09.2022ல் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 07.10.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | M/S. Shiva Engineering work<br>11/5 33 A, Subramanya Nagar, Mecheri,<br>Mettur, Salem – 636 453. | ரூ.3,40,814.00 | -0.36 %<br>Less | Federal Bank, Mecheri Branch,<br>Customer ID No. 132358362<br>AC No. 18130400005661<br>Date.06.10.2022<br>Deposit Amount Rs.4,500 |
| 2 | M/S. Phoenix & Co,<br>Konganapuram, Karattur,<br>Edappady, Salem. | ரூ.3,54,783.00 | +3.72 %<br>More | Indian Bank,<br>Mecheri Branch, Salem,<br>DD No. 323601<br>Date.06.10.2022<br>Deposit Amount Rs.4,500 |

அ). மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் M/S. Shiva Engineering work, Mecheri, Salem. (L1) என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.36 % ரூ.3,40,814.00/– குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதற்கும், பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(E3/NNT/13465/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
28–10–2022.